தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 288/ந/2023
நாள் 26.10.2023

திரு. செல். கனகராஜ்,
புதுக்கோட்டை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
புதுக்கோட்டை நகராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம். – எதிர் மனுதாரர்

புதுக்கோட்டை மாவட்டம், மேலராஜவீதி, எண்.2423 என்ற முகவரியில் வசிக்கும் திரு. செல். கனகராஜ் என்பவரின் 09.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2023 அன்று பெறப்பட்டு 288/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

புதுக்கோட்டை மாவட்டம், மேலராஜவீதி, எண்.2423 என்ற முகவரியில் வசிக்கும் திரு. செல். கனகராஜ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

``புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் டவுன் புதிய பேருந்து நிலைய இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அருகே திறந்தவெளி மழைநீர் வடிகால் உள்ளது. இது நகரின் அனைத்து பகுதிகளிலும் உள்ள மழைநீர் வடிகாலின் தொடர்ச்சியாக தண்ணீர் வந்து சேரும் வடிகாலாகும்.

நகராட்சி நிர்வாக அறிக்கையின்படி, மழைநீர் வடிகால் மேல் எந்த கட்டுமானமும் மேற்கொள்ளக்கூடாது என்றும், அவ்வாறு மழைநீர் வடிகால்மேல் ஆக்கிரமிப்பு இருந்தால் நகராட்சி நிர்வாகம் மூலம் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என நகராட்சி அறிவிப்பு கொடுத்து வருவது வாடிக்கையான நிலையாகும்.

மழைநீர் வடிகால் மேல் எந்த ஆக்கிரமிப்பும் இருக்க கூடாது எனும் நிலையில் நகராட்சி நிர்வாகம் மழைநீர் வடிகால்மேல் மூடி, கட்டுமானம் செய்து அந்த கட்டுமானத்தின் மேல் பூங்கா அமைத்துள்ளனர். மேற்கண்ட கட்டுமானப் பணிக்கு ரூபாய் 50 இலட்சம் வரை மத்திய அரசு நிதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் கட்டுமானப்பணி சம்பந்தமான ஒப்பந்தப்புள்ளி கோரியது குறித்து மாவட்ட அரசு ஒப்பந்த மலரில் செய்தி வெளியிடாமல் ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி மேற்கண்ட ரூ 50 இலட்சத்தில் பணிகள் முறையாக தரமாக மேற்கொள்ளப்படவில்லை.

மழைநீர் வடிகால் மேல் கட்டுமானம் அமைப்பதே சட்டவிதி மீறல் எனும் நிலையில் சட்டவிதிகளை புறந்தள்ளி, தான் நகராட்சி ஆணையர் என்ற அதிகாரத்தில் மழைநீர் வடிகால்மேல் எது இருந்தாலும் அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என பொதுமக்களுக்கு தான் அளித்த அறிக்கைக்கு எதிராக தானே செயல்பட்டு மழைநீர் வடிகால்மேல் கட்டுமானம் அமைக்க சாத்தியக்கூறு அறிக்கை அளித்து மக்களின் வரிப்பணம் ரூபாய் 50 இலட்சம் விரயமாவதற்கு நகராட்சி ஆணையராக இருந்த திரு.S.நாகராஜன் காரணமாக இருந்துள்ளார்.

இந்நிலையில் மழைநீர் வடிகாலை ஆக்கிரமிக்கக் கூடாது என சட்ட நடைமுறைப்படி பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்த நகராட்சி ஆணையர் திரு.நாகராஜன் மேற்கண்ட சட்டவிதியினை, தானே மீறியுள்ளது வேலியே பயிரை மேயும் நிலைக்கு ஒப்பாகும்.

சட்டம் அனைவருக்கும் சமம் எனும் நிலையில் மழைநீர் வடிகால்மேல் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்று அறிவித்த நகராட்சி ஆணையர், மேற்கண்ட மழைநீர் வடிகால்மேல் பூங்கா மற்றும் DD திட்ட சாலை அமைக்க மத்திய அரசு நிதி ரூபாய் 50 இலட்சத்திற்கான பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோருதல் குறித்த அறிவிப்பினை அரசின் மாவட்ட ஒப்பந்த செய்தி மலரில் வெளியிடாமல் உள்நோக்கத்துடன் தவிர்த்துள்ளார்.

மேலும் மேற்கண்ட மழைநீர் வடிகால்மேல் கட்டுமானம் மற்றும் பூங்கா பணிகள், பணிகளின் தரம் குறித்தும், பணிகளுக்கான முழுவிவரங்கள் குறித்தும் தகவல் வேண்டி தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் நகராட்சி அலுவலகம் புதுக்கோட்டை மற்றும் இயக்குநர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை ஆகிய அலுவலகங்களுக்கு மனுக்கள் அளித்தும் மேற்கண்ட அலுவலகங்கள் தகவல்கள் தர மறுத்து வருகின்றன.

மழைநீர் வடிகால்மேல் கட்டுமானம் செய்து அதன் மேல் பூங்கா அமைக்கப்பட்டது தொடர்பாக சட்டப்படி வழங்கப்பட வேண்டிய தகவல்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் வேண்டியும் தகவல் வழங்க மறுக்கும் நிலையானது, ரூபாய் 50 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட்ட பூங்கா பணிகள் தரமானவையாக இருக்க முடியாது என்ற அச்சத்தின் காரணமாகவே தகவல்கள் வழங்க மறுக்கப்படுகிறது.

மழைநீர் வடிகால்மேல் எந்த ஆக்கிரமிப்பும் இருக்கக் கூடாது என்ற விதியினை மீறி நகராட்சி ஆணையரே திறந்த வெளி மழைநீர் வடிகாலினை கான்கிரீட் கட்டுமானம் கொண்டு மூடி அதன் மேல் பூங்கா அமைக்க மாவட்ட ஆட்சியருக்கு சாத்தியக்கூறு அறிக்கை அளித்தது தொடர்பாக உரிய விசாரணை வேண்டுவதுடன், தான் நகராட்சி ஆணையராகவும் மேல்முறையீட்டு அலுவலராகவும் பணியில் இருந்த காலத்தில் மழைநீர் வடிகால் ஒப்பந்தப்பணிகள் தொடர்பான தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் கோரப்பட்ட தகவல்களை வழங்க மறுத்து தனது அரசுப்பணியினை செய்ய மறுத்த நிலை தொடர்பாகவும் திரு.S.நாகராஜன் அவர்கள் மீது உரிய விசாரணை மற்றும் நடவடிக்கை வேண்டுவதுடன் அவர் நகராட்சி ஆணையராக பணியில் இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்பணிகளின் தரம் குறித்தும் குறிப்பாக மழைநீர் வடிகால்மேல் கட்டப்பட்ட பூங்கா பணிகளின் தரம் குறித்தும், முழுமையான ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் அகில பாரதிய க்ராஹக் பஞ்சாயத்து அமைப்பின் சார்பில் பணிவுடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.09.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் புதுக்கோட்டை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

புதுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் தனது 03.10.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

"புதுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் அருகில் வடிகால்மேல் கட்டப்பட்ட பூங்கா தொடர்பாக நகராட்சிக்கு எதிராக திரு.செல்.கனகராஜ் என்பவரால் மக்கள் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். PLA/OP/06/2022–ல் மனுதாரர் பேருந்து நிலையம் அருகில் செல்லும் மழைநீர் வடிகாலை ஆக்கிரமிப்பு செய்வதும், மழைநீர் செல்லும் பாதையை அடைப்பதும் நிறுத்தப்பட வேண்டும் என வழக்கு தொடுத்துள்ளார்.

மேற்படி வழக்கிற்கு, ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை எனவும், வடிகால் அடைக்காத வண்ணம் இரண்டு இடங்களில் குப்பைகளை வடிகட்டும் தடுப்புகளும், வடிகால் வாய்க்காலினை சுத்தம் செய்யும் வகையில் மேற்புற திறப்பு அமைத்தும், அதிக மழைநீர் வரும் காலத்தில் கொள்ளளவு அடையும் பொருட்டு மேற்பரப்பு விரிவுபடுத்தியும் அடித்தளம் ஆழப்படுத்தியும், பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விளக்கத்தினை மக்கள் நீதிமன்றம் முன்பாக ஆஜராகி எழுத்து பூர்வமாக புதுக்கோட்டை நகராட்சி அலுவலக உதவி பொறியாளர் சமர்ப்பித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து மனுதாரர் திரு.செல்.கனகராஜ் என்பவர் கடிதத்தின் வாயிலாகவும், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் வாயிலாகவும் ஆவணங்கள் கோரியும், மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கும் தொடர்ந்து மனு செய்து வருகிறார். மேற்படி தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் கூட்ட மனுக்கள் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுவிற்கு உரிய தகவல்கள் மற்றும் பதிலறிக்கைகள் மனுதாரருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2021–22 ஆம் ஆண்டு, ராஜ்யசபா பாராளுமன்ற உறுப்பினரால் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்யப்பட்ட கீழ்க்கண்ட இரண்டு பணிகளுக்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் செயல்முறையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தகாரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | நகராட்சி பேருந்து நிலையம் அருகில் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடம் மேல்புறம் செல்லும் திறந்த வெளி மழைநீர் வடிகால் வாரியை சுத்தம் செய்தல், இருபுறமும் கான்கிரீட் சுவர் பில்லர், கான்கிரீட் மூடு ஸ்லாப், கழிவு துகள்கள் சுத்தம் செய்யும் வடிகட்டி தொட்டி, ஆழ்நுழைவு சுத்தம் செய்யும் தொட்டி, வாய்கால் புனரமைப்பு பணி செய்தல். | ரூ. 25.00 | திரு.S.V.பெருமாள் |

| | | | |
|---|---|---|---|
| 2. | நகராட்சிக்குட்பட்ட DD திட்ட சாலையில் இருபுறமும் சிமெண்ட் கற்கள் வசதி, மின்விளக்கு வசதி மற்றும் பொதுமக்கள் நடைபாதை மற்றும் உடற்பயிற்சி, பொழுது போக்கு சமூக பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | ரூ.25.00 | திரு.T.சுரேஷ் |

அதன்படி, மேற்படி இரண்டு பணிகளுக்கும் 13.05.2022 அன்று இந்நகராட்சியின் மூலம் இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு 30.06.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது. பணி முடித்தமைக்கு உரிய தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டு பணி முடிவறிக்கையும் அனுப்பப்பட்டுவிட்டது.

இப்பணி தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் உரிய தகவல் மற்றும் ஆவணங்கள் மனுதாரர் திரு.செல்.கனகராஜ் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலையிலும், இப்பொருள் தொடர்பாக, மாவட்ட நிர்வாகம், நகராட்சி நிர்வாகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆகியோருக்கு தொடர்ச்சியாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழும், கடிதங்களின் வாயிலாகவும் புகார் அளித்து வருகிறார். மனுதாரர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் கோரிய தகவலுக்கு உரிய தகவல் அளிக்கப்பட்ட நிலையில் தகவல் கொடுக்கவில்லை என பல்வேறு கடிதங்களின் வாயிலாக தெரிவித்து அரசு அலுவலகங்களை தொடர்ந்து செயல்படவிடாமலும், தகவல் அறியும் உரிமை சட்டத்தினை தவறாக பயன்படுத்தியும் வருகிறார்.

மேலும், மேற்கண்ட இரண்டு பணிகளும் முறையாக மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை அவர்களால் நிர்வாக அனுமதி பெற்றும், ஒப்பந்தப்புள்ளி கோரியும், நகராட்சி பொறியாளர்கள் மற்றும் நகராட்சி உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

இப்பணியில், பேருந்து நிலையத்தில் சைக்கிள் ஸ்டாண்டு பக்கவாட்டில் கால்வாய் 500 அடி நீளத்திலும் 10 அடி அகலத்திலும் உள்ளது. கால்வாயை, பொதுமக்கள் நலன் கருதியும், ஆக்கிரமிப்புகளை தடுக்கும் பொருட்டும் அப்போதைய பாராளுமன்ற ராஜ்யசபா உறுப்பினரின் பரிந்துரையின்பேரில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இப்பணிகள் குறித்து பொதுமக்களிடமிருந்தும், வணிகர் சங்கம் மற்றும் இதர சமூக அமைப்புகளிடம் இருந்தும் எவ்வித புகார்களும் வரப்பெறவில்லை என்ற விபரத்தினையும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் முன்பாக பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**(3) மனுதாரரும் மற்றும் புதுக்கோட்டை நகராட்சி ஆணையரும் 04.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**(4) மனுதாரர் திரு.செல்.கனகராஜ் 04.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"புதுக்கோட்டை மாவட்டம், டவுன் புதிய பேருந்து நிலைய இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தின் அருகில் திறந்தவெளி மழைநீர் வடிகால் உள்ளது. மேற்கண்ட மழைநீர் வடிகால் இடம் புதுக்கோட்டை நகராட்சியால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, மழைநீர் வடிகால் இடத்தின் மீது பூங்கா ஒன்றை அமைத்துள்ளனர். 50 இலட்சம் ரூபாய்க்கும் மேலாக செலவு செய்து கட்டப்பட்ட பூங்கா யாருக்கும் பயனற்றதாக உள்ளது. மழைநீர் வடிகால் மீது எவ்வித ஆக்கிரமிப்போ அல்லது கட்டுமானமோ இருக்கக் கூடாது என நகராட்சி அறிவிப்பு கொடுத்துள்ள நிலையில் மேற்கண்ட பூங்கா நகராட்சியால் கட்டப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால்வாயின்மீது மேற்கண்ட பூங்கா அமைக்கப்பட்டதால், அம்மழைநீர் வடிகாலில் சேரும் குப்பைக் கூளங்களையும், தூர் வாரும் பணியையும் மேற்கொள்ள இயலாது. மழைநீர் வடிகால் திறந்த நிலையில் உள்ள நிலையில் கழிவுகள் கொட்டப்படுவதால் அங்கு தூய்மையை பராமரித்திட மழைநீர் வடிகால் மேல் கட்டுமானம் செய்து பூங்கா அமைத்ததாக நகராட்சியினர் தெரிவிக்கின்றனர். அவ்வாறெனில் புதுக்கோட்டை நகராட்சியில் உள்ள சுமார் 450 கிலோ மீட்டருக்கு மழைநீர் வடிகால்வாய் நகரின் உள்ளே செல்கிறது அவையும் முறையாக கட்டுமானம் இல்லாமல் அரைகுறையாக இருக்கும் நிலையை நகராட்சியினர் சரி செய்வார்களா என தெரியவில்லை. இந்நேர்வு தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மற்றும் உயர் அலுவலர்களுக்கு புகார் மனுக்கள் அனுப்பியும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, மேற்கண்ட மழைநீர் வடிகால்வாயின் மீது புதுக்கோட்டை நகராட்சியால் பூங்கா அமைத்தது குறித்தும், அப்பூங்கா பணிகளின் தரம் குறித்தும் முழுமையாக ஆய்வு செய்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல்களை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

மேலும், இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 04.10.2023 நாளிட்ட எழுத்துபூர்வ வாக்குமூலத்தையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

புகார் மனுவில் குறிப்பிடப்பட்டவைகளையே 04.10.2023 நாளிடப்பட்ட தனது எழுத்துபூர்வ மேல் வாக்குமூலத்திலும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**(5) எதிர்மனுதாரரான புதுக்கோட்டை நகராட்சி ஆணையராக பணியாற்றும் திருமதி. S.N.சியாமளா மற்றும் உதவிப் பொறியாளர் திரு. எம். கலியகுமார் ஆகியோர் 04.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"புதுக்கோட்டை நகராட்சியில் 21 கிலோ மீட்டர் சுற்றளவிற்கு மனுதாரர் குறிப்பிட்டுள்ள மழைநீர் வடிகால்வாய் செல்கிறது. புதிய பேருந்து நிலைய இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்தின் அருகில் செல்லும் மேற்கண்ட திறந்தவெளி மழைநீர் வடிகால்வாயின் ஒரு பகுதியில், அதாவது 130 மீட்டர் நீளத்திற்கு புதுக்கோட்டை நகராட்சியால் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கால்வாய் தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்படாமலிருக்கும் பொருட்டு, 2021–22ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறைகள் நாள் 20.4.2022ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்ட பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பூங்கா அமைக்கப்படும்போது வடிகால்வாய் அடைக்கப்படாவண்ணம் வடிகட்டும் தடுப்புகளும், வடிகால்வாயை சுத்தம் செய்யும் வகையில் 4 இடங்களில் மேற்புற திறப்பு அமைத்தும், வடிகால்வாயை ஆழப்படுத்தியும், அதனை விரிவுபடுத்தியும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், மேற்கண்ட மழைநீர் வடிகால்வாய் மீது

அமைக்கப்பட்ட பூங்காவினால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், மேற்கண்ட பூங்கா பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதையும், மேலும் மேற்கண்ட பூங்காவின் கீழ் உள்ள மழைநீர் வடிகாலில் சேரும் குப்பைக் கூளங்கள் மாதந்தோறும் அகற்றப்படுகின்றன என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மேலும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் நகராட்சி ஆணையரின் 3.10.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளனர்.

(6) இதற்கிடையில் மனுதாரர் திரு.செல்.கனகராஜ் என்பவர் இம்முறைமன்றத்திற்கு அனுப்பியுள்ள தனது 05.10.2023 நாளிட்ட மனுவில் புதுக்கோட்டை நகரில் மழைநீர் வடிகால்களின் மொத்த நீளம் 150 கி.மீ. ஆகும். தான் வாக்குமூலம் அளிக்கும்போது தவறுதலாக 450 கி.மீ என தெரிவித்ததற்கு வருத்தம் தெரிவித்து, இனி வருங்காலத்தில் சரியான தகவல் அளிப்பேன் என தெரிவித்துள்ளார்.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், புதுக்கோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை, புதுக்கோட்டை நகராட்சி ஆணையர், உதவி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.செல்.கனகராஜ் என்பவர் தனது 09.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்துநிலைய இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அருகில், புதுக்கோட்டை நகராட்சியால் மழைநீர் வடிகால்வாயை ஆக்கிரமித்து அதன்மேல் ரூ 50/— இலட்சம் மதிப்பீட்டில் விதிமீறி பூங்கா அமைக்கப்பட்டுள்ளது என புகார் தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மேற்காணும் புகார் தொடர்பான புதுக்கோட்டை நகராட்சி ஆவணங்களை பரிசீலித்ததில் புதுக்கோட்டை நகராட்சியில் 2021 – 22 ஆம் ஆண்டு ராஜ்யசபா பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நகராட்சி பேருந்துநிலைய இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அருகில் செல்லும் திறந்தவெளி மழைநீர் வடிகால்வாயை சுத்தம் செய்து இருபுறமும் கான்கிரீட் சுவர் எழுப்பி மூடு ஸ்லாப் அமைப்பதற்கு ரூ.25/—இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் நகராட்சிக்குட்பட்ட DD திட்ட சாலையில் பூங்கா அமைப்பதற்கு ரூ.25/— இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூ.50/— இலட்சம் மதிப்பீட்டிலான திட்டத்திற்கு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக அனுமதியும் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என ஆணையர் தெரிவித்துள்ளார்.

மேலும், புதுக்கோட்டை நகராட்சியில் 21 கி.மீ சுற்றளவிற்கு செல்லும் திறந்தவெளி மழைநீர் வடிகால்வாயின் ஒரு பகுதியான 130 மீட்டர் நீளத்திற்கு மட்டும் பொதுமக்களின் நலன் கருதி பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

- வடிகால் அடைப்பு ஏற்படா வண்ணம் வடிகட்டும் தடுப்புகளும் மற்றும் சுத்தம் செய்யும் வகையில் 4 மேற்புற திறப்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.
- மாதந்தோறும் பூங்காவிற்கு கீழுள்ள மழைநீர் வடிகால்வாய் சுத்தம் செய்யப்படுகிறது.

- மேலும், மேற்காணும் பூங்கா தற்போது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது என்றும் பூங்கா அமைக்கப்பட்டது தொடர்பாக பொது மக்களிடமிருந்தோ மற்றும் சமூக அமைப்புகள் மூலமாகவோ எவ்வித புகார்களும் பெறப்படவில்லை எனவும் புதுக்கோட்டை ஆணையர் தெரிவித்துள்ளார்.

மழைநீர் கால்வாய் மீது பூங்கா அமைப்பது நீர்நிலைகள் பாதிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும் என்பதை கருத்தில் கொள்ளாமலும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் அமைவதை கருத்தில் கொள்ளாலும் செயல்பட்டுள்ள புதுக்கோட்டை நகராட்சி ஆணையாளரின் செயலினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது. இதைக் கவனத்தில் கொள்ளாமல் திட்டத்தைச் செயல்படுத்திய சம்பந்தப்பட்ட ஆணையர் மற்றும் கள அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் இருப்பதை உறுதிசெய்திடுமாறு அனைத்து நகராட்சி ஆணையாளர்களுக்கும் உரிய அறிவுரைகளை வழங்கிடுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்திடும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

புதுக்கோட்டை நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அருகில் ரூ.50/– இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா அமைக்கப்பட்டதற்கு செலவினங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை மூத்த பொறியாளர் மூலம் ஆய்வு செய்து ஆய்வறிக்கையினை 45 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. செல். கனகராஜ்,
2423, மேலராஜவீதிதி புதுக்கோட்டை – 622 001.
2) ஆணையாளர், புதுக்கோட்டை நகராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்.
3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.
4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
27/10/23